# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## REA.No.2/2025

## in

## REP.No. 209/2021

சாட்சி : PW- 1

பெயர் : திரு. விஜய்ஆனந்த் தேதி : 12.03.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:- (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

2ம் எதிர்மனுதாரர் சுரேஷ்குமாரை எனக்கு 2 ஆண்டுகளாக தெரியும். 2ம் எதிர்மனுதாரர் நடைபயிற்சிக்காக விளையாட்டு மைதானம் வருவார். நானும், அங்கு செல்வேன். அந்த வகையில் எனக்கு அவரை தெரியும். வழக்கு சொத்தை கிரயம் பெறுவதாக 13.05.2018 அன்று பேசினோம். அதற்கான வில்லங்க சான்றிதழை கொடுக்கும்படி நான் கேட்டேன். மேற்படி தேதிக்கு 4 மாதங்களுக்கு முன்பு 2ம் எதிர்மனுதாரர் அந்த சொத்தை கிரயம் பெற்றார். நான் ச.அடி ஒன்றுக்கு ரூ.1500/-க்கு விலை பேசி ரூ.75 ஆயிரத்தை முன்பணமாக கொடுத்தேன். 2ம் எதிர்மனுதாரர் அவரது மூலபத்திரத்தையும் கிரய பத்திரத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டார். கிரய ஒப்பந்த பத்திரம் எழுத்துமூலமாக எழுதி கொள்ளவில்லை. 2ம் எதிர்மனுதாரர் மூலபத்திரத்தை என்னிடம் கொடுத்துவிட்டதால் எழுத்துமூலமான ஒப்பந்த பத்திரத்தை எழுதிக்கொள்ளவில்லை. 2ம் எதிர்மனுதாரர் 16.03.2018 ல் சொத்தை கிரயம் பெற்றுள்ளர் என்றால் சரிதான். நான் 13.05.2018 அன்று வழக்கு சொத்தை கிரயம் பெறுவதாக 2ம் எதிர்மனுதாரரிடம் பேசி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:08:30 +0530

I Additional District Judge,
Salem

முன்பணம் கொடுத்ததாக சொல்லும் சங்கதி தவறானது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் வழக்கு சொத்தை கிரயம் பெறவேண்டி பேசியிருந்தால் எழுத்துமூலமான கிரய பத்திரம் எழுதியிருப்போம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் ராஜா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு சொத்தை பொறுத்து ஜப்தி செய்யவேண்டி பரிகாரம் கோரியிருந்தார் என்றும், எனக்கு அந்த விவரம் தெரியும் என்றும சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் 06.02.2019 அன்று 2ம் எதிர்மனுதாரர் சுரேஷ்குமார் நீதிமன்றத்தில் தகுந்த பிணையம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருந்தது என்றால் எனக்கு அது தெரியாது. 2ம் எதிர்மனுதாரரின் சொத்து ஜப்தி ஆகிவிடும் என்ற காரணத்தினால் நானும், 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து பெயரளவிற்கு கிரய பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. 31.01.2019 தேதியிட்ட எனது கிரய பத்திரத்தில் நான் ஏற்கனவே முன்பணம் ரூ.75 ஆயிரம் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். கிரய தொகையை வங்கி பரிவர்த்தனை மூலமாக அல்லது காசோலை மூலமாக நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மனுவிலும், எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்திலும் வழக்கு சொத்தை பொறுத்து 13.05.2018 அன்று நாங்கள் வாய்மொழியாக ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் 1ம் எதிர்மனுதாரர் ராஜாவிடம் சுயார்ஜிதமாக கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன். அந்த கிரய பத்திரத்தை இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை. எனக்கும், சுரேஷ்குமாருக்கும், 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கை பற்றியும் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி உத்தரவை பற்றியும் எனக்கு தெரியும் என்றால்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:08:37 +0530

I Additional District Judge,
Salem

சரியல்ல. கிரயம் எழுதப்பட்ட பிறகு எனது பெயருக்கு ஆவணங்கள் மாறிவிட்டதா என்பதை சரிபார்ப்பதற்காக 02.02.2019 அன்று நான் வில்லங்க சான்றிதழை கணினி பதிவிறக்கம் செய்து சரிபார்த்தேன். 07.11.2024 அன்று வில்லங்க சான்று பெற்று பார்த்தபோது தான் சொத்து ஜப்தி ஆன விவரத்தை தெரிந்து கொண்டேன். 02.02.2019 முதல் 07.11.2024 க்கு முன்பாக நான் வேறு வில்லங்க சான்று பெற்று பார்த்தேனா என்றால் 27.02.2019 ல் பட்டா மாறுதலுக்காக ஒரு முறை வில்லங்க சான்று பெற்று பார்த்தேன். அந்த வில்லங்க சான்றை இம்மனுவில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஜப்தி விவரம் தெரிந்தவுடன் 25.11.2024 ல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நிறைவேற்றுமனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படி ஒரு மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 6 வது பத்தியில் இந்த ஜப்தி நடவடிக்கைகள் எனக்கு ஏற்கனவே தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் 1 ம் எதிர்மனுதாரர் ராஜா வழக்கு சொத்தை ஏலத்திற்கு எடுப்பதற்கு யாரும் இல்லை என்றும், அதனால் வழக்கு சொத்தை அவரே ஏலத்திற்கு எடுத்துகொள்வதற்கு உரிய மனுவை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், 2 ம் எதிர்மனுதாரரும் நிறைவேற்றுமனு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து வந்துள்ளோம் என்றால் சரியல்ல. என் பெயருக்கு ஏற்பட்ட கிரய ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டுள்ளது என்றும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய தொகையை நான் 2 ம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான உரிமையை தடுப்பதற்காக 2 ம் எதிர்மனுதாரர்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:08:44 +0530

I Additional District Judge,
Salem

தூண்டுதலின்பேரில் அவருடன் கூட்டுசேர்ந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே எனது மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:08:51 +0530

I Additional District Judge,
Salem